# யோபு, சாலொமோனின் உன்னதப்பாட்டு, பிரசங்கி, சங்கீதம், நீதிமொழிகள்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் P4b பாடத்தை வாசிக்கவும்.

**ஜெபம் :** "அன்பான கர்த்தாவே. பல நூற்றுண்டுகளுக்கு முன்னதாக நீர் எபிரேய மொழி பேசிய இஸ்ரவேல் மக்களை ஏவி (எழுத வைத்த அழகிய கவிதைகளைக் கொண்டு) அறிவுரை கூறவும், புத்தி சொல்லவும் உம்மைத் துதிக்கவும் எங்களுக்கு உதவி செய்யும்."

மக்களின் தேவைக்கு ஏற்ற செயல்பாடுகளைத் தெரிந்து கொள்ளவும்.

1. **கவிதை புத்தகங்களில் இருந்து போதிக்க தேவ வார்த்தைகளைக் கொண்டு ஜெபத்தோடு ஆயத்தம் செய்யவும்.**

பழங்கால எபிரேய கவிதையின் தனிச்சிறப்பு வாய்ந்த அழகையையும் சக்தியையும் விவரிக்கவும்.

- பல கலாச்சார மக்களின் கவிதைகள் தொடை(rhyme) நயம் வாய்ந்தவை; வரிகளின் கடைசி வார்த்தைகள் ஒன்று போல் ஒலிக்கும். அதற்கு சீர் (metre) உண்டு : சொற்றொடர்களில் வரும் அசையின் எண்ணிக்கையும் நிலையும் சீர்பொருந்தி வரும். இத்தகைய கவிதையை மொழி பெயர்ப்பது கடினம். எல்லா மொழிகளிலும் மக்கள் தன் வார்த்தையை வாசிக்க வேண்டும் என்று எண்ணியதால் தேவன் அதற்கு ஏற்ற ஒரு கவிதை நடையை உபயோகித்தார்.
- எல்லா மொழிகளுக்கும் கலாச்சாரங்களுக்கும் பொருந்தக் கூடிய ஒரு அழகு மற்றும் சமநிலையான வடிவத்தை பண்டைய இஸ்ரவேல் கவிஞர்கள் பயன்படுத்தினர். வார்த்தைகளின் வடிவத்தையும், அசைவுகளையும் இயைபு படுத்துவதை விடவும், தங்கள் சிந்தனையின் அர்த்தத்தை சமநிலைப் படுத்துமாறு தேவன் கவிஞர்களை ஏவினார். ஒரு சிந்தனையை இரண்டு அல்லது கூடுதல் வகைகளில் வெளிப்படுத்தி அவர்கள் தங்கள் செய்யுளை சமநிலைப்படுத்தினர்.
- இரண்டு இணையான சொற்றொடர்களால் ஒரு கருத்து சமநிலைப்படுத்தப்படுவதை நீதி 16:11ல் காண்க.
- மாறுபட்ட சொற்றொடர்களால் ஒரு கருத்து சமநிலை படுத்தப்படுவதை நீதி 13:1 ல் காண்க



*சோம்பேறியே, நீ எறும்பினிடத்தில் போய் அதன் வழிகளைப் பார்த்து, ஞானத்தைக் கற்றுக்கொள்.*

**நாடகப்புத்தகங்கள் யோபுவும், சாலொமோனின் உன்னதப்பாட்டும்.**

தேவனையும் அவரது நீதியையும் பற்றிய கருத்தில் மிகவும் வேறுபாடு கொண்ட மனிதர்களின் ஆழமான ஊடுறுவும் உரையாடலை யோபு பதிவு செய்கிறது. யோபு 11 ஆம் அதிகாரத்தில் யோபுவினுடைய ஒரு நண்பனான சோப்பார், இந்துக்கள் கூறும் "கர்மாவைப் போல", மக்கள் தங்கள் பாவத்தினாலேயே துன்பம் அடைகிறார்கள் என்ற பொதுவான தவறான கருத்தைக் கூறுகிறான்.

யோபுவை சோப்பார் குற்றம் கூறுவதை **யோபு 11:11-15** ல் காண்க.

யோபு சோப்பாரின் ஆலோசனை குறித்து என்ன நினைத்தான் என்பதை **யோபு 12:1-3**ல் காண்க.

இளம் காதலர்களின் பாசத்தை ஒரு குழுவின் குரலை பின்னனியாக எதிரொலிக்க வைத்து, சாலொமோனின் உன்னதப்பாட்டு வெளிப்படுத்துகிறது. தேவனுக்கும் விசுவாசிகளுக்கும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கும் அவரது மணவாட்டிக்கும் (பின்பற்றுவோர்) இடையில் இருக்கும் பரஸ்பர காதலை அது சித்தரிக்கிறது.

பண்டைய **இஸ்ரவேலர் பாடிய சங்கீதங்கள்.**

- அநேகமாக எல்லா கிறிஸ்தவ சபைப்பிரிவுகளும் ஆராதனையில் சங்கீதத்தைப் பயன்படுத்துகின்றன.
- தாவீது இராஜாவும். அவனது இராகத்தலைவனான ஆசாபும், மற்றும் உள்ள பாடல் ஆசிரியர்களும், தங்களது ஆழமான உணர்வுகளால் தேவனுக்கு துதியையும், வேண்டுதலையும், கோபத்தையும், நன்றியுணர்வையும் குறைகளையும், நம்பிக்கையையும், வேதனையையும் நன்றியையும் தெரிவித்தனர்.
- **2 சாமுவேல் 23:1**ல் தாவீது அவனுடைய வாழ்க்கையின் இறுக்கட்டத்தில் பாடிய பாடல்.

ஞானத்தைக் கூறும் **நீதிமொழிகள்**

நீதிமொழிகள், தாவீதின் மகன் சாலொமோனாலும் பிற ஞானிகளாலும் எழுதப்பட்ட அறிவுரைகள்.

**நீதிமொழிகள் 5**ல் காண்க.

- ஒரு பரஸ்திரியின் பேச்சு எப்படி இருக்கும் என்பதை வசனம் 3-4ல் காண்க.
- அவளது காலடிகள் எங்கு போகும் *(வச.5-6)*
- கணவர்கள் ஏன் மனைவிகளிடம் உண்மை உள்ளவர்களாக இருக்க வேண்டும் *(வச.15-23)*

பல நீதிமொழிகள் இளைஞர்களுக்கு அறிவுரை கூறுகின்றன.

"என்மகனே என் வார்த்தைகளைக் கவனி!
என் வசனங்களுக்கு உன் செவியைச் சாய்!
அவை உன் கண்களை விட்டுப் பிரியாதிருப்பதாக!
அவைகளை உன் இருதயத்துக்குள்ளே காத்துக்கொள்!
அவைகளை கண்டுபிடிக்கிறவர்களுக்கு அவைகள் ஜீவனும்
அவர்கள் உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாம்.
எல்லாக் காவவோடும் உன் இருதயத்தைக் காத்துக் கொள்.
அதனிடத்தில் இருந்து ஜீவ ஊற்று புறப்படும்." *(நீதி.4:20-23).*



சோம்பேறி கூறுகிறான்: "வழியில் சிங்கம் இருக்கும். நடுவீதியில் சிங்கம் இருக்கும் கதவு கீல்முளையில் ஆடுகிறது போல, சோம்பேறியும் படுக்கையில் ஆடிக்கொண்டு இருக்கிறான்" *(நீதி. 26:13-14).*



குணமுள்ள பெண் செய்யும் பல விஷயங்களை **நீதி** 31:10-31ல் காண்க.

ஒரு வயதான மனிதனின் எதிர்மறையான குறை கூறுதல்: பிரசங்கி.

ஒரு வயதான எழுத்தாளன், பெரும்பாலும் சாலொமோனாக இருக்கலாம், உலக வாழ்க்கையின் வீணான தன்மையை நினைவு கூருகிறான் (சூரியனின் கீழ்) அவன் எல்லா இன்பங்களையும் அனுபவித்து கடைசியில் அவை எல்லாம் மாயை என்று அறிந்தான் (காற்றைத் துரத்திக் கொண்டு ஓடுவது).



**2. இந்த வாரத்தில் நீங்களும் உங்கள் உடன் ஊழியக்காரர்களும் செய்ய வேண்டிய விஷயங்களை கலந்து திட்டமிடுதல்.**

பெற்றோர்களை சந்தித்து நீதி. 13:24, 19:18, 22:6, 23:13 ஆகியவற்றை நடைமுறைப்படுத்த உதவுதல்.

நீதி 1:8-9 ஐ நடைமுறைப்படுத்த குழந்தைகளுக்கு உதவுதல்.

வேதாகமத்தை ஆழமாக ஆராய்வதில் விருப்பம் உடைய விசுவாசிகள் யோபு, சங்கீதம், நீதி மொழிகள் ஆகிய புத்தகங்களை நுட்பமாக ஆராயும்படி கூறுங்கள். பின்னர் அவர்கள் அறிந்து கொண்டதை அவர்கள் பகிர்ந்து கொள்ளட்டும்.

நீங்கள் பயிற்றுவிக்கும் **புதிய மேய்ப்பர்கள்** பழைய ஏற்பாட்டு புத்தகங்களில் கவிதையை அறிந்து கொள்ள உதவுங்கள்.

தேவனை மையப்படுத்தும் சங்கீத வசனங்களை தெரிந்தெடுத்து அவரைத் துதியுங்கள். ஆராதனை வேளையில் அவற்றை பயன்படுத்துங்கள்.

**3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக**

பழைய ஏற்பாட்டு **கவிதைகளின்** தனிச்சிறப்பு வாய்ந்த முறையையும் அழகையும் விளக்க சில உதாரணங்களை வாசித்துக் காட்டுவோம்.

வெவ்வேறு கவிதைப் புத்தகங்களின் **முக்கிய பொருளை** விவரிக்கவும்.

**நீதிமொழிகளின்** புத்தகத்தில் இருந்து சில வசனங்களை விளக்கவும்.

கவிதை புத்தகங்களை வாசித்து ஆசீர்வாதங்களைப் பெற்ற **விசுவாசிகள்** அதைப் பற்றி கூறட்டும்.

**சிறுவர்கள்** தாங்கள் தயாரித்தவற்றை வழங்கட்டும்.

**கர்த்தரின் பந்தியை ஆசரிப்பதற்காக** சங்கீதம் 133 ஐ வாசித்து, இயேசுவின் தியாக மரணத்தின் நினைவாக நாம் அப்பம் பிட்கும் போது, விசுவாசிகளுக்கு இடையில் ஆழ்ந்த ஐக்கியத்தை அனுபவிக்கிறோம் என்பதை விளக்கவும்.

இரண்டு அல்லது மூன்று பேர் அடங்கிய **குழுவாக** ஒருவருக்கொருவர் ஜெபித்து, எபிரேய கவிதையில் பயன்படும் வசனங்களை மீள்பார்வை செய்யவும்.

சங்கீதம் 145:1-2 ஐ **மனனம் செய்க.**

Copyright © 2004 by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net